| | | | |
|---|---|---|---|
| Headline | Dato palani bare danetran medical fee | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 08 Oct 2012 | Language | Tamil |
| Circulation | 45,000 | Readership | 124,000 |
| Section | News | Color | Black/white |
| Page No | 4 | ArticleSize | 326 cm² |
| AdValue | RM 632 | PR Value | RM 1,897 |
| | | | |



# விபத்தில் காயமுற்ற தனேந்திரனின் மருத்துவ செலவை டத்தோஶ்ரீ பழனிவேல் ஏற்றுக்கொண்டார்

**(டி. எல். இளமுருகன்)**

**தைப்பிங், அக். 8-**

பல்கலைக்கழக நுழைவுக்காக காத்திருக்கும் தறுவாயில் கார் விபத்தொன்றில் சிக்கி பலத்த காயமுற்ற இந்திய மாணவர் ஒருவரின் மருத்துவச் செலவை ம.இ.கா. தேசியத் தலைவர் டத்தோஶ்ரீ ஜி.பழனிவேல் ஏற்றுக் கொண்டார்.

கமுண்டிங், தாமான் ஜானா பெர்மாய் என்ற இடத்தைச் சேர்ந்த தனேந்திரன் த/பெ மதியழகன் (வயது 20) என்பவர் கடந்த 4.8.2012 அன்று இரவு 9.00 மணியளவில் வடக்கு - தெற்கு நெடுஞ்சாலை ஜெலப்பாங் அருகே காரை செலுத்திக் கொண் டிருக்கும் போது கட்டுப்பாட்டை இழந்த அவரது கார் பல முறை தடம் புரண்டதால், அவர் உட்பட காரிலிருந்த ஐவரும் காயமுற்றனர். இவ்விபத்தில் தலை, நெற்றி மற்றும் கையிலும் பலத்த காயமுற்ற ம. தனேந்திரன் ஈப்போ பந்தாய் மெடிக்கல் சென்ட்ரல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் அம்மருத்துவமனையில் தங்கியிருந்து 2 வாரக்கால சிகிச்சைப் பெற்றதற்கான மருத்துவச் செலவுக் கட்டணத்தை பிரதமர் துறை அமைச்சருமான டத்தோஶ்ரீ ஜி.பழனி வேல் ஏற்றுக் கொண்டார் என்று தனேந்திரனின் தந்தையான ம.இ.கா. துப்பாய் கிளையின் தலைவர் ச.மதியழகன் கூறினார். தங்களது மகனின் மருத்துவ செலவினத்தை ஏற்றுக் கொண்ட டத்தோஶ்ரீ பழனிவேலுக்கு மதியழகனும் அவரது மனைவி கா.காந்திமதியும் நன்றி கூறினர். அந்நன்றி கூறும் நிகழ்வில் ம.இ.கா. தைப்பிங் தொகுதி துணைத்தலைவர் க.முருகேசன், முன்னாள் தொகுதி தலைவர் டாக்டர் கே.என்.இராஜாராம், தொகுதி உதவி தலைவர் ச.மதிவாணன், பேரா மாநில ம.இ.கா. இளைஞர் பகுதி தலைவர் மு.வீரன் மற்றும் மேலும் பல கிளைகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.



*ம.இ.கா. தலைவர்களுடன் மதியழகனும், தனேந்திரனும்.*

பூர்ண குணமடைந்த ம.தனேந்திரன் கடந்த மாதம் 3ஆம் தேதி முதல் கெடா, சிந்தோக்கிலுள்ள வட மலேசியா பல்கலைக்கழகத்தில் (யூ.யூ.எம்.) தகவல் தொழில் நுட்பத் துறையில் பயின்று வருகிறார்.

இதேபோன்று அவ்விபத்தில் சொற்ப காயமுற்று சிகிச்சை பெற்று வந்த தனேந்திரனின் நான்கு நண்பர்களும் நாட்டிலுள்ள இதர பல்கலைக் கழகங்களில் மேற்கல்வியை தொடங்கி யுள்ளனர். இதனிடையே தங்களது மகனுக்கு தேசியத் தலைவர் டத்தோஶ்ரீ பழனிவேல் வாயிலாக மருத்துவ சிகிச்சை கட்டணம் பெற உதவிய அனைத்து ம.இ.கா. தலைவர்களுக்கும் மதியழகன் - காந்திமதி தம்பதியர் நெஞ்சார்ந்த நன்றி நல்கினர்.



*காயமுற்ற தனேந்திரனின் நெற்றிப்பகுதி குணமடைந்து விட்டதை தந்தை மதியழகன் சுட்டிக்காட்டுகிறார்.*

Powered by: MediaBanc
Be informed